முருகப்பெருமான் துணை

**மகான் விளையாட்டுச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**22.04.2024,** திங்கட்கிழமை

1. ஞானிகளின் பூசைமுறைகள்தனை
ஞாலமதில் உலகோர் கடைபிடிக்க
ஞானவழிகாட்டி அருளுகின்ற
ஞானதேசிகன் பெருமைதனை கூறி
2. கூறியே குரோதி தகர் திங்கள்
குறைவிலா நவதிகதி சோமவாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 09 ம் நாள், 22.04.2024, திங்கட்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
தேசிகன் கேட்க விளையாட்டுச்சித்தர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான சமூகம் படைக்க
ஞானவழி காட்டும் அரங்கன்
ஞானமே உலகமாற்றம் தருகின்ற
4. தருகின்ற உயர் வேதமாகும்
தரணியோர் அரங்கனை நாடி
குருமார்க்கமாம் சன்மார்க்கம் தனை
குவலயம் மாற்றும் மார்க்கமாக
5. ஆகவே உலகோர்கள் தானும்
ஆதரித்து வழிமொழிந்து நன்கு
மிகையாகப் பரப்பி வருதலுற
மக்களிடை ஜீவகாருண்ய ஒழுக்கம்
6. ஒழுக்கம் நிரம்பி தரும சிந்தைபரவி
உலகமெங்கும் தருமபலத்தின்பலம்
பழக்கவழக்கமாகிச் சிறந்து நன்கு
பாருலகில் மக்களெல்லாம் உலக சேமம்
7. உலகசேமம் குறித்து செயல்படும்
உயர் மக்களாகத் தேறி இனிதே
உலகமெங்கிலும் சமூக மாற்றம்
உயர் ஞானி அரங்கன் கொள்கை வழி

8. கொள்கை வழி கண்டு நன்கு
குவலயம் ஞானலோக மாற்றம்
ஆளுமை சக்தி நிலை மாறியும்
ஆற்றல்பட ஞான ஆட்சி காலமாக

9. ஆகவே மாற்றம் கண்டடைந்து
அறிவிப்பேன் வானவர்கள் துணைவர
செகமெங்கும் நன்மைகள் பெருக
சேவைகள் பெருகி சடுதி மாற்றம்

10. மாற்றம் அரங்க மகானாலும்
மகான் சீடர் பெருமக்களாலும்
ஆற்றலுடன் கண்டு உலகம்
ஆன்மீக ஞான வழிகாட்டலில்

11. வழிகாட்டலில் வையகம் சிறக்கும்
வளமும் இயற்கை பலமும் கூடி
அழியாமை தனை மக்கள் கண்டு
அகிலம்தனை மாற்றி அமைப்பர்

துல்லிய ஆசி முற்றே

—சுபம்—